இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 18-09-2025

# வக்பு வழக்கில் வந்துள்ள தீர்ப்பு!

வக்பு சட்டத்தையும், அதன் நோக்கத்தையும் சிதைக்க நினைத்தது பா.ஜ.க. அரசு. அதற்குத் தடை போட்டு விட்டது உச்சநீதிமன்றம்.

ஆட்சிக்கு வந்தது முதல் பா.ஜ.க. செய்யும் ஒரே செயல், இசுலாமியர்களைக் குறி வைப்பதுதான். CAA, NRC, மதரஸா சட்டம், ஒரே குடியியல் சட்டம் (UCC), காஷ்மீரைப் பிரித்தது, 370 நீக்கம், பாபர் மசூதி இடிப்பு ஆகிய அனைத்தும் இந்த வகைப்பட்டதுதான். இதன் தொடர்ச்சியாகத் தான் வக்பு சட்டத் திருத்தம் செய்தார்கள். நள்ளிரவில் நிறைவேற்றினார்கள் இந்தச் சட்டத்தை.

கடந்த ஏப்ரல் மாதம் 2 ஆம் நாள் நள்ளிரவில் “ஒற்றுமை வக்ஃப் மேலாண்மை, திறன் மற்றும் மேம்பாடு (UMEED)” என்ற புதிய மசோதாவை மக்களவையில் நிறைவேற்றினார்கள். 288 உறுப்பினர்கள் இந்த மசோதாவை ஆதரித்தார்கள். 232 பேர் எதிர்த்து வாக்களித்தார்கள். இரண்டுக்கும் வேறுபாடு 56 வாக்குகள் தான். இதேபோல் மாநிலங்களவையில் ஏப்ரல் 3 நள்ளிரவில் நிறைவேற்றினார்கள். மசோதாவுக்கு ஆதரவாக 128 வாக்குகள் பதிவானது. மசோதாவுக்கு எதிராக 95 வாக்குகள் பதிவானது. வேறுபாடு 33 வாக்குகள் தான். மக்களவை உறுப்பினர்கள் 232 பேராலும், மாநிலங்களவை உறுப்பினர்கள் 95 பேராலும் நிராகரிக்கப்பட்டது தான் இந்தச் சட்டம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சிறுபான்மையினருக்கான மத, கல்வி, பண்பாட்டு உரிமைகளைப் பாதுகாக்கிறது. அதனைச் சிதைக்கும் வகையில் இந்த சட்டத் திருத்தத்தைச் செய்தார்கள். 2023 ஆம் ஆண்டு முதல் சிறுபான்மையின ஆணையக் கூட்டம் நான்கு முறை நடந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் இதுகுறித்து ஒரு முறை கூட விவாதிக்கவில்லை.

இசுலாமிய சிறுபான்மையினர் சொத்துகளைப் பாதுகாக்கத் தான் வக்பு சட்டம் இருக்கிறது. ஆனால் இசுலாமியர்களின் சொத்துக்களைக் குறிவைத்துப் பறிக்கவே இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது. ‘முஸ்லிம் சமுதாயத்தின் சொத்துக்களைக் கைப்பற்றும் முயற்சிதான் இந்தச் சட்டம்’ என்று முஸ்லிம் தனிநபர் சட்ட வாரியம் சொன்னது.

**இந்த சட்டத்திருத்தத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கடுமையாக எதிர்த்தது. “இந்தியத் திருநாட்டில் மத நல்லிணக்கத்துடன் அனைத்து மதங்களைச் சார்ந்த மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.**

**அனைத்து சிறுபான்மையினரின் நலத்தினையும் பேணிக் காக்கும் கடமை, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கு உள்ளது. ஆனால் இந்த நல்லிணக்கத்திற்கும் சிறுபான்மையின இஸ்லாமிய சமுதாய மக்களுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் வகையில், 1995-ஆம் ஆண்டின் வக்பு சட்டத்தினைத் திருத்துவதற்கு கடந்த ஆகஸ்ட் மாதம் ஒன்றிய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு வாரிய சட்டத் திருத்த முன்வரைவினை (The Waqf (Amendment) Bill, 2024) முழுமையாக திரும்பப் பெற வேண்டும்” என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

இந்த சட்டத் திருத்தத்தை ரத்து செய்யக் கோரி தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தன. அப்போது இந்தச் சட்டத்துக்கு இடைக்காலத் தடை விதித்தது உச்சநீதிமன்றம். இந்த வழக்கின் இறுதித் தீர்ப்பு வந்துள்ளது. ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள வக்பு சட்டத்தில் சில திருத்தங்களுக்கு மட்டும் தடை விதித்து மாண்பமை உச்சநீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

வக்புக்குச் சொத்தை அளிக்க, 5 ஆண்டு இஸ்லாத்தைக் கட்டாயமாக நடைமுறையில் கடைப்பிடித்திருக்க வேண்டும் எனும் விதிக்குத் தடை விதித்துள்ளது உச்சநீதிமன்றம். வக்பு நிலத்தை அரசு நிலம் என்று ஒரு குற்றச்சாட்டு எழுந்தாலே, உரிய அதிகாரி அறிக்கை அளிக்கும்வரை அல்லது அரசு முடிவெடுக்கும் வரை அச்சொத்தைப் பறிக்கும் அதிகாரத்துக்குத் தடை விதித்துள்ளது. ‘வக்பு பயனர்’ என்பதை நீக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கான அதிகாரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மத்திய வக்பு வாரியத்தில் நான்கிற்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லாதோரைச் சேர்ப்பது, மாநில வக்பு வாரியங்களில் மூன்றுக்கும் மேற்பட்ட முஸ்லீம் அல்லாதோரைச் சேர்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டு விட்டது. இந்த வாரியங்களில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருப்பதை உறுதி செய்துவிட்டது உச்சநீதிமன்றம்.

வக்பு வாரியங்களில் தலைமைச் செயல் அதிகாரிகளை நியமிப்பது தொடர்பாக கருத்துக் கூறிய உச்சநீதிமன்றம், “முடிந்த வரை இந்தப் பதவிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த நபரை, வக்பு வாரியத்தின் செயலாளராக ஏற்கனவே பணியாற்றிய ஒருவரை நியமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்” என்றும் அறிவுரை சொல்லி இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக இந்த சட்டத் திருத்தங்கள் செல்லாது என்று உச்சநீதிமன்றம் சொல்லவில்லை என்றாலும், ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்நோக்கமான திருத்தங்களுக்குத் தடை விதித்து விட்டது உச்சநீதிமன்றம். பா.ஜ.க. அரசின் உள்நோக்கங்களை உச்சநீதி மன்றம் உணர்ந்து தடை விதித்துவிட்டது. முழுமையான தடைக்கு அடுத்த கட்ட சட்டப் போராட்டங்கள் அவசியம் ஆகிறது.




தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.9.2025) திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, கனிமொழி கருணாநிதி, துரை வைகோ, அருண் நேரு, கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

### 147-ஆவது பிறந்தநாள்! திருச்சியில்

# தந்தை பெரியார் திருவுருவப் படத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை!

## மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதல்வர் தலைமையில் - சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

**சென்னை, செப்.18-**

**தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையப் பகுதியில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.**

**திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக நேற்று (17.9.2025) திருச்சிராப்பள்ளிக்கு வருகை தந்த போது, திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் வரவேற்றனர்.

பின்னர், வழிநெடுகிலும் சாலையின் இருபுறங்களிலும் பெருந்திரளான பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அதனைத் தொடர்ந்து, தந்தை பெரியார் அவர்களின் 147ஆவது பிறந்த நாளையொட்டி, திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர், தந்தை பெரியார் அவர்களின் 147 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

### சமூக நீதி நாள் உறுதிமொழி

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அன்பு நெறியையும் - யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பண்பு நெறியையும் எனது வாழ்வியல் வழிமுறைகளாகக் கடைப்பிடிப்பேன்!**

**சுயமரியாதை ஆளுமைத் திறனும் பகுத்தறிவுப் பார்வையும் கொண்டவையாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!**

**சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை ஒப்படைத்துக் கொள்வேன்!**

**மானுடத்தின் மீது பற்றையும் மனிதாபிமானத்தையும் என்றும் போற்றுவேன்.**

**சமூக நீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைத்திட இந்த நாளில் உறுதியேற்கிறேன்!**

இந்நிகழ்வில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ.ராசா, துரை வைகோ, அருண் நேரு, கவிஞர் சல்மா, சட்டமன்ற உறுப்பினர்கள் வி.செந்தில்பாலாஜி, எம்.பழனியாண்டி, அ.சௌந்தர பாண்டியன், அப்துல் சமது, எஸ்.கதிரவன், என்.தியாகராஜன், ஸ்டாலின் குமார், திருமதி தமிழரசி, வை.முத்துராஜா, திரு. துரை சந்திர சேகர், நீலமேகம் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### இந்தியப் பிரதமர்

# நரேந்திரமோடி பிறந்தநாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, செப். 18-

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பிரதமருக்கு பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

பிரதமர் அவர்கள், நல்ல ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் நீண்ட ஆயுளுடன் வாழ எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணாவின் உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், என்.சுரேஷ்ராஜன், ஜெ.ஹெலன் டேவிட்சன், குமரி ஸ்டீபன், பா.பாபு உட்பட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.